# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 754/நகராட்சி/2019**
**நாள் : 30/01/2020**

**திரு ம. மெய்தீன் அப்துல் காதர்,**
**காயல் பட்டணம்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**காயல்பட்டணம்.** – **எதிர் மனுதாரர்கள்**

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், நகராட்சிப் பகுதியைச் சேர்ந்த திரு ம. மெய்தீன் அப்துல் காதர் என்பவரிடமிருந்து 27.06.2019 அன்று பெறப்பட்ட மின்னஞ்சல் செய்தியில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு முறையீட்டினை இம்முறைமன்ற நடுவம் தாமாக வழக்குப் பதிவு செய்து, நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆகியோரின் அறிக்கைகள் பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், நகராட்சிப் பகுதியைச் சேர்ந்த திரு ம. மெய்தீன் அப்துல் காதர் என்பவர், டிக்–டாக் செயலி மூலம் காயல்பட்டணம் நகராட்சி அலுவலகப் பணியாளர்கள் மேற்கொண்ட அத்துமீறிய செயலினை மின்னஞ்சல் மூலம் தெரிவித்து, சம்பந்தப்பட்ட அலுவலகப் பணியாளர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கக் கோரி முறையீடு செய்திருந்தார்.

2. மேற்குறிப்பிட்டட மின்னஞ்சல் செய்தி குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. சம்பந்தப்பட்ட , பணியாளர்கள் வழங்கிய தன்னிலை விளக்கத்தில், இது சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் யாவும் காழ்ப்புணர்ச்சியால் சில மாதங்களுக்கு முன்பு விடுமுறை நாட்களில் அலுவலகம் வரும் பொழுது எடுக்கப்பட்ட புகைப்படங்களை ஊடகங்களின் வழியாகவும், செய்தியாகவும் வெளியிட்டு உள்நோக்கத்துடன் வேண்டுமென்றே புணைக்கப்பட்ட குற்றச்சாட்டு என்றும் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் நோக்கத்துடன் இப்பதிவு வேண்டுமென்றே ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர் என்றும், பணியாளர்களின் இச்செயல் முதல் தடவையாக உள்ளதாலும், சம்பந்தப்பட்ட பணியாளர்கள் இதுபோன்ற குற்றச்சாட்டுகளுக்கு முன்பு உள்ளாகாத நிலையிலும் அவர்கள் எச்சரிக்கப்பட்டு கடமையுணர்வுடன் பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று நகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

3. மேற்குறிப்பிட்ட டிக்–டாக் செயலி முறைகேடு குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த அறிக்கையினை திருநெல்வேலி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு நகராட்சி ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையரின் அறிக்கையினை பரிசீலனை செய்த நகராட்சிகளின் மண்டல இயக்குநர் சம்பந்தப்பட்டப் பணியாளர்களை அலுவலக நடைமுறைகளைப் பின்பற்றி பணியாற்ற வேண்டுமென்றும் இதுபோன்ற நிகழ்வுகளில் இனி ஈடுபடக்கூடாது என எச்சரித்து அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று தனது 23.01.2020 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

4. காயல்பட்டணம் , நகராட்சிப் பணியாளர்களின் நடவடிக்கை மற்றும் செயல்பாடுகள் பொதுமக்களால் கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகின்றன. நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தி இது போன்ற முறைகேடுகளில் ஈடுபடுவதை நகராட்சிப் பணியாளர்கள் அறவே தவிர்க்க வேண்டும். குறிப்பாக அலுவலக வளாகங்களில் அலுவலகப் பணிகளைத் தவிர்த்து பிற செயல்களில் ஈடுபடுவதை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. சம்பந்தப்பட்ட பணியாளர்களின் செயல்பாட்டினை தொடர்ந்து கண்காணிக்கவும் காயல்பட்டணம் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2020–**ஆம் ஆண்டு ஜனவரி திங்கள், **30–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு, ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

5.2.2020

5/2/2020

பெறுநர்

1. நகராட்சி ஆணையாளர்,
   காயல்பட்டணம்,
   தூத்துக்குடி மாவட்டம்..

2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   திருநெல்வேலி,
   திருநெல்வேலி மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி